www.tamilarangam.net

**நண்பர்களே!** **25.11.2002**

**தோழர்களே!**

*ஒரு சில நிமிடங்கள்!*

*பொறுமையாக படியுங்கள்!*

அன்று ஒரு நாள், நாங்கள் – நீங்கள் எல்லோரும், இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்படுவதை, சிறையிலும் – தெருவிலும் – வீட்டிலும் கோரமாக துன்புறுத்தப்பட்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை, சொந்த மண்ணில் நம்மவர்கள் அகதிகளாக்கப்பட்டதை, நமது தேசத்தின் வளங்கள் எல்லாம் சூறையாடப்படுவதை பார்த்தும் – கேள்விப்பட்டும் பொறுக்கமுடியாது கொதித்தெழுந்தவர்கள்.

நமது உடமைகளையும் – உயிரையும் – உறவுகளையும் துச்சமாக மதித்து. உயிரைக் கொடுத்தாவது தமிழ் மண்ணையும் – மக்களையும் காக்கப்புறப்பட்டவர்கள், பேராளிகளாக மாறியவர்கள்.

சிறீலங்கா இனவாத அரசை எதிர்த்து போராடிய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட இயக்கங்களில் இணைந்தவர்கள் மேடுகளில் காடுகளில் முகாம் அமைத்தவர்கள், படகுகளில் கடல் கடந்தும் – விமானங்களில் நாட்டு எல்லைகளை கடந்தும் போர்ப்பயிற்சிக்காக வெளிநாடுகளில் வாழ்ந்தவர்கள். பணம் சம்பாதிக்கச் சென்று வெளிநாட்டு வாழ்வின் சுகபோகங்களை – பண ஈட்டல்களை கைவிட்டு தாய்நாட்டுக்காக போராட இராணுவ பயிற்சி பெற வேறு நாடுகளுக்கு வந்தவர்கள்.

போர்ப்பயிற்சிக்கான பயணங்களில், இராணுவப் பயிற்சி முகாம்களில் எதிர்பாராத தவறுகளால் சில தோழர்களை இழந்தவர்கள். சிறீலங்கா அரசு படைகளுடனான மோதலில் எங்களுடன் இருந்த பல போராளிகள், நாங்கள் கொண்டிருந்த இலட்சியத்தை அடைய வீரமரணம் அடைந்தார்கள், தங்கள் உயிரை – உடலை தாய் மண்ணுக்கு தியாகம் செய்தனர். அவர்களை நாம் மறக்க முடியுமா? தேச விடுதலைக்காக தங்களை தாய்மண்ணுக்கு ஈய்ந்த அனைத்து இலக்க போராளிகளின் நினைவுதினமான "யூலை தியாகிகள் தினத்தை" மறக்க முடியுமா?

ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் – தமிழ்த் தேசத்தின் சுதந்திரத்தை வேண்டி – சுரண்டப்படுகின்ற தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயிரம் ஆயிரம் ஆண்களும் – பெண்களும் இரத்தம் சிந்தி போராடிக் கொண்டிருந்தபோது, தலைமை அதிகார வெறியும், தனி இயக்க சர்வாதிகார ஆணவமும் கொண்ட, ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தீர்மானகரமான தலைவர்கள் தங்களின் தனி இயக்க சர்வாதிகாரத்தை நிறுவதில் குறியாக இருந்தனர். இயக்க தலைமைகள் ஒவ்வொன்றும் அன்னிய நாடுகளிடம் இருந்து ஆயுதம் – பணம் பெறுவதற்காக ஒன்றை ஒன்று மாறி மாறி காட்டிக் கொடுத்தன. அன்னியநாடுகளின் சூழ்ச்சிக்கு இரையாகின. அழித்தொழிப்பில் தடைவிதிப்பில் இறங்கின.

விடுதலைப் போராட்டம் குறித்த, இத்தலைமைகளின் குட்டி முதலாளித்துவ அரசியல் – இராணுவ சிந்தனைகளும், குறுகிய கால வெற்றி பற்றிய கற்பனையும், போராட்டத்தில் எல்லையற்ற நம்பிக்கையீனங்களை மக்கள் மத்தியில் – போராளிகள் முன்வெளிக்காட்டியது.

இயக்கங்களுக்கு இடையிலான மோதலில் – அழித்தொழிப்பில் நூற்றுக்கணக்கான பெண்–ஆண் போராளிகள் இயக்கத் தலைமைகளால் பலியெடுக்கப்பட்டனர். சீறீலங்கா அரசின் சித்திரவதைகள் – கொடூரக் கொலைகள், இயக்கத்தலைமைகளால் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டது.

இயக்கத் தலைமைகளின் தவறான இராணுவ – அரசியல் வழிகள் / நடைமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து. மாற்றாக சரியான அரசியல் – இராணுவ வழிகளை / நடைமுறைகளை முன்வைத்து இயக்கங்களின் உள்ளே குரல் எழுப்பியவர்கள் மீது, கீழ்த்தரமான சித்திரவதைகளும் 'பட்டம்' சூட்டுதல்களும் தலைமைகளால் கட்டவிழ்த்துவிடப்பட்டது. தேசத்தின் சுதந்திரம் – மக்களின் விடுதலை – சமூகப்புரட்சி பற்றி அறிவுபூர்வமான பார்வையுள்ள, அக்கறையுள்ள, நேர்மையான – உறுதியான முன்னணிப் போராளிகள் கோரமான கொடிய சித்திரவதைகளுக்கு பின் வெட்டி புதைக்கப்பட்டனர். சுட்டு எரிக்கப்பட்டனர். போர்முனைகளில் சதிக்கொலைகள் மூலம் வீரர்களாக்கப்பட்டனர். ஒருதட்டில் சாப்பிட்டு, ஒன்றாக படுத்து உறங்கி, உயிருக்கு உயிராக பழகிய தோழர்கள். உள் இயக்க படுகொலையில், சக இயக்க அழித்தொழிப்பில் பலியாகிப் போயினர். ,இவை நீங்களும் – நாங்களும் அறிந்தது, உணர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புலிகள் இயக்கத்தின் அழித்தொழிப்பை – தடைவிதிப்பை எதிர்கொள்ள முடியாமல், தாங்கள் சார்ந்த இயக்கத் தலைமைகளின் தவறுகளை திருத்தமுடியாமல் போராளிகள் விழி பிதுங்கினர். தங்களை தற்காத்து வாழ வழி தேடினர். உயிரை மயிராக நினைத்து வந்த நிலைமாறி – மயிரையும் உயிராக மதிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். ஒவ்வொரு போராளியும் தனக்கு தெரிந்த வழிகளில் தன்னை தற்காக்க முயன்றான். தன்னால் முடிந்தளவுக்கு தங்களுடன் நெருங்கி இருந்த போராளிகளையும் பாதுகாத்தனர். தாய்நாட்டுக்கும் – வெளிநாட்டுக்கும் கூட்டிச் சென்றனர். கூப்பிட்டனர். தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக போராடப் புறப்பட்டவர்கள், தங்களைப் பாதுகாப்பதற்காக வெளிநாடுகளுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது கதையல்ல நிஜம்.

இங்கே தான், நீங்கள் – நாங்கள் என்ற நிலையை அடைந்தோம். நாங்கள் சார்ந்த இயக்க தலைமைகளின் துப்பாக்கித் தேடுதல்வேட்டையை, நஞ்சுவைத்து கொலைசெய்யும் சூழ்ச்சிகளை எதிர்கொண்டோம், எந்த ஒரு விடுதலை இயக்கமும் தேசிய விடுதலைப்போரில் இருப்பதை தடை செய்யும் – அழித்தொழிக்கும், தனி இயக்க சர்வாதிகாரம் கொண்ட புலிகளின் மிருக பலத்தை – கைதுகளை – படுகொலைகளை எதிர்கொண்டோம். ஆனால் **1987** இலையுதிர் காலத்தில் புரட்சிகர தேசபத்த விடுதலை இயக்கத்தை கட்டத் தொடங்கினோம். “தேசபத்தன்” பத்திரிகை மூலம் தம்மை அடையாளப்படுத்தினோம், எல்லா இயக்கங்களிலும் இருந்த அராஜக எதிர்ப்பு சக்திகளை அணிதிரட்டினோம்.

ஆயுதம் தாங்கி போராடிய இயக்கங்கள் மத்தியில் **1987** இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஒரு அரசியல் பிளவை உருவாக்கியது. அன்னிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் தமிழ்த் தேசிய வரலாறு தொடங்கியது.

தமிழீழ தேசிய வளங்களும், தமிழீழ மக்களின் உழைப்பும், சிறீலங்காவின் இனவாத ஆளும் வர்க்கங்களால் கொள்ளையடிக்கப்படுவது, சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாப்பது. இனவாத அரசு படைகள் தமிழ் மண்ணில் இருந்து வெளியேற்றப்படுவது, இன அழிப்பில் இருந்து தமிழ் இனம் பாதுகாக்கப்படுவது மட்டும், **தமிழீழ தேசிய விடுதலை ஆகிவிடாது என உரைத்தோம்.**

உலக வளங்களை கொள்ளையடித்து, உலக மக்களின் உழைப்பை நவீன – மிக நவீன முறைகளில் ஒட்டச் சுரண்டி வரும் பல்தேசிய கொம்பனிகள் (MNC), தேசம் கடந்த கொம்பனிகள் (TNC) பன்னாட்டு அரசுகளின் (UN) உலகமயமான தேசிய ஒடுக்குமுறையில், முதலாளித்துவ ஏகபோக கொள்ளையில் இருந்தும் தமிழீழ தேசிய வளங்களும் – தமிழீழ மக்களின் உழைப்பும் விடுதலை பெற வேண்டும். பாதுகாக்கப்படவேண்டும் அதுதான் **உண்மையான தமிழீழ தேசிய சுதந்திரம், தேசிய விடுதலை என்பதை தெளிவாக முன்வைக்கிறோம்.**

புலிகள் இயக்கம், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை – போரை, உண்மையான தேசிய சுதந்திரத்தை – மக்களின் விடுதலையை நோக்கி முன்னேடுத்துச் செல்லவில்லை என்பது பட்டவர்த்தனமாக நிரூபிக்கப்பட்டு வருகின்றது. ஏகாதிபத்திய – தேசிய ஒடுக்குமுறை நிறைந்த உலகமயமாக்கல் முறைக்குள், தங்களின் தமிழ் இன அதிகாரத்தை நிறுவிக்கொள்வதில் புலிகள் குறியாக இருப்பது அய்யத்திற்கிடமற்றது. உலகமயமாக்கல் வழியிலான அன்னியத் தேசிய ஒடுக்குமுறையை அனுமதித்து – அங்கீகரித்தபடி, புலிகள் முன்வைக்கும் **தேசியம், தாயகம், சுயநிர்ணயம்** என்பன, உண்மையான தமிழீழ தேசிய சுதந்திரப் போரை – தமிழீழ மக்களின் விடுதலைப்போராட்டத்தை திசைதிருப்பும் அரசியல் பிரச்சாரமாகும், இந்த எல்லையை தாண்டும் சக்தியை தமிழீழ முதலாளிவர்க்க அரசியல் வரலாற்று ரீதியாக இழந்துவிட்டது. இதை புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழீழத் தேசிய வளங்களையும் – மக்களின் உழைப்பையும் சுரண்டிக் கொள்ளையடித்து அன்னியருடன் பங்கு போட்டுக் கொள்ளும், தமிழீழ தரகு முதலாளித்துவ அரசியலையும் – அதிகார கட்டமைப்பையும் உடைத்தெறியும் போராட்டத்துடாகவே, தமிழீழ தேசிய சக்திகளின் புரட்சிகர தேசிய விடுதலைப் போராட்டம் முன்னேற முடியும், தமிழீழ புதிய சனநாயக அரசை நிறுவும் இலட்சியத்தை அடைவதற்காக, நாங்கள் எங்களை அர்ப்பணித்துப் போராடி வாழ்ந்து வருகிறோம். இந்த சமூக இலட்சியத்தை வெல்வதற்கு ஆக இரத்தம் சிந்திய எல்லா இயக்க போராளிகளின் கனவுகளையும் நாம் சுமந்து நிற்கிறோம்.

www.tamilarangam.net

இந்திய ஆக்கிரமிப்பு யுத்தம் நடந்தபோது, அதற்கு இந்தியாவிலேயே எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், எமது அமைப்பின் நிதித்தேவையை நிவர்த்திக்கவும், இந்தியாவில் நமது தோழர்கள் ஒரு ஆயுத நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் அதில் பங்கு பற்றியவர்கள் இந்திய அரசால் தேடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். வெளியில் வந்தவர்கள் சிலர் மீண்டும் தலைமறைவாகினர். இதைவிட இந்தியாவிலுள்ள புரட்சிகர மக்கள் விடுதலை இயக்கங்களுடன் கூட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட்ட சிலரும், இந்திய மத்திய அரசால் குறிப்பிட்ட பகுதி மாநில அரசுகளால் தேடப்படுகின்றனர்.

சிறீலங்கா அரசுக்கு தலைமறைவாக வாழ்ந்த நிலமை ஒருபுறம், தமிழீழ கொலை வெறி இயக்க தலைமைகளுக்கு – உளவுப்பிரிவிக்கு தலைமறைவாக இருக்க வேண்டிய நிலை மறுபுறம். இந்தியாவில், இந்தியரசுக்கும் – ஆட்காட்டி தமிழர்களுக்கும் தலைமறைவாக வாழவேண்டிய நிலமை. இரத்த சொந்த பந்தங்கள் இன்றியும், தொடர்புகள் பேணமுடியாத நிலைமையிலும், சிறிது காலம் கூட தொடர்ந்து ஓரிடத்தில் வேலை செய்யமுடியாத – தங்கி இருக்க முடியாத தினசரி வாழ்வே ஒருதலைமறைவு போராட்ட வாழ்வு.

முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கங்களை கூட அனுமதிக்காத, அழித்தொழித்து நசுக்கி வந்த – வரும் புலிகள் இயக்கம், கொடி கட்டிப் பறக்கும் பூமியில் – தேசத்தில், ஒரு புரட்சிகர தேசபக்த விடுதலை இயக்கம் இரகசியமாக கட்டப்படவேண்டியுள்ளது. தலைமை தலைமறைவாக இருக்க – இயங்க வேண்டியுள்ளது, இதற்காக நம்மை தயார்படுத்துவது வரலாற்றுத் தேவை

தலைமறைவு வாழ்க்கையில் உள்ள திருமணமாகாத தனி நபர்களை பராமரிப்பது, திருமணமாகி விவாகரத்து பெற்றவர்களை பராமரிப்பது, திருமணமாகி பிள்ளைகுட்டிகளுடன் உள்ள குடும்பங்களை பராமரிப்பது, தலைமறைவாக வாழும் நபர்களுக்கும் – வெளிப்படையாக வாழும் நபர்களுக்கும் இடையிலான உறவுகளை பராமரிப்பது. இதில் எவ்வளவு சிரமம். எச்சரிக்கை, வெற்றி – தோல்வி இருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு தலைமறைவாக இருந்த சில தோழர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். நிபந்தனைப் பிணையில் வெளிவந்தவர்களில் சிலர் மீண்டும் முழுமையான தலைமறைவு வாழ்க்கைக்கு சென்றுவிட்டனர். சிறையில் சில தோழர்கள் தொடர்ந்தும் வாடுகின்றனர். வழக்காடுவதற்கு கூட போதிய பணம் இல்லாது திண்டாடுகின்றோம்.

நண்பர்களே! தோழர்களே!

இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்தம் – பேச்சுவார்த்தை, சுமூகமான நடமாட்டவாய்ப்பு இச்சூழலைப் பயன்படுத்தி, இந்தியாவில் தலைமறைவாகவுள்ள தோழர்கள். குடும்பங்கள் தாய்நாட்டுக்குள் செல்லதீர்மானித்துள்ளோம்.

தலைமறைவாகவுள்ள தோழர்களின் பிரயாணங்களுக்கான ஆவணத்தயாரிப்பு, போக்கு வரத்து செலவு, இலங்கையில் தங்குவதற்கான ஆவண தயாரிப்பு, குறிப்பிட்ட காலத்துக்கு தோழர்களை பராமரிப்பது என குறைந்த பட்சம் ஐந்து (5) இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இந்தப் பணத்தை எப்படி உருவாக்குவது என்ற கேள்வி எங்களுக்குள் எழுந்தது.

மீண்டும் ஒரு பணநடவடிக்கையை இந்தியாவில் செய்வதா? அதில் தவறுகள் ஏற்படும் பட்சத்தில், இன்றுள்ள குறிப்பான உலக சூழ்நிலைமையில் எதிரிகளின் பிரச்சார மற்றும் அமைப்பு மீதான ஒடுக்குமுறையை நம்மால் எதிர்கொள்ள முடியுமா? மாற்று வழிமுறைகள் என்ன? அந்த மாற்று வழிமுறைகளில் முதல் வழிமுறைதான் உங்களிடம் – நாங்கள் நேரடியாக நிதி உதவி கோருவது, சிந்தியுங்கள்.

தமிழீழ புரட்சிகர தேசபக்த விடுதலை இயக்கம் ஒன்றின் சமூக அவசியத்தை, வரலாற்று ரீதியான நேரடி அனுபவங்களுடன் புரிந்து கொள்ளும் தமிழீழ புரட்சிகர முற்போக்கு சனநாயக சக்திகள் வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். உங்களிடம் எங்களின் நிதித்தேவையை முன்வைப்பதில் தவறு இல்லை என முடிவு செய்தோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள், இயக்கங்களில் – இராணுவ முகாம்களில் இருந்தபோது உங்களின் – எங்களின் அடிப்படை பராமரிப்பு தேவைகளுக்கான நிதியை இலட்சம் இலட்சமாக கொடுத்து உதவியவர்கள், அன்று வெளிநாடுகளில் உழைத்துக் கொண்டிருந்த எங்கள் தேசத்து உறவுகள் என்பதற்கு சான்று தேவை இல்லை.

அன்று விடுதலை போராட்டம் – போராட்ட இயக்கம் சார்ந்து ஒரு பரந்துபட்ட எழுச்சி ஆதரவு தமிழீழ மக்களிடம் வெளிப்பட்டது. ஆனால், 25 வருட போராட்ட இயக்கங்களின் நடைமுறைகளில் இருந்து மக்களும் ஒரு அனுபவரீதியான படிப்பனையை பெற்றிருக்கிறார்கள். இதேபோல் தமிழீழ சமூகத்தின் முன்னேறிய அரசியல் ஆதரவுச் சக்திகளும் பட்டறிவை, திட்டமிட்ட தெளிவான ஆதரவு தெரிவிப்பு முறையை உள்வாங்கிக் கொண்டுள்ளனர்.

நமது இந்த நிதி ஆதரவு கோரும் கோரிக்கை பரந்துபட்ட மக்களிடம் எடுத்துச் செல்லப்படக் கூடியதல்ல. முன்னேறிய அரசியல் ஆதரவுச் சக்திகளிடம் மட்டும் கோரக்கூடியது. நிதித்தேவையின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆனால் இதைக் கோரக்கூடிய – உதவக்கூடிய சக்திகளின் வட்டம் குறைவானது. எனவே உங்களின் உயர்ந்த பட்ச நிதி உதவ மூலம் நாங்கள் தாய்நாட்டுக்குச் செல்ல உதவுமாறு கோருகிறோம்.

வெளிநாடு வருவதற்காக உறவுகளுக்கு பலவழிகளிலும் உதவிவரும் நீங்கள்.

நீங்கள் கொண்டிருந்த இலட்சியத்துக்காக அன்று, உங்கள் உயிரைக் கொடுக்க முன்வந்தீர்கள். அந்த இலட்சியத்துக்காக உயிர் உள்ளவரை நிற்கும். எங்களுக்கு இன்று உங்களின் உயர்ந்த பட்ச உதவி தேவைப்படுகிறது.

நாங்கள் தாய்நாட்டுக்குச் சென்று **தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்தை தொடர, விடுதலைப் போராட்டத்தை புதிய கட்டத்துக்கு வளர்க்க உதவுவீர்கள்** என நம்புகிறோம், எதிர்பார்க்கிறோம்.

*(குறிப்பு. 1997இல் எங்கள் அமைப்பின் தோழர் ஒருவர் கண்பார்வை இழந்து நின்றபோது அவரின் கண் அறுவைச் சிகிச்சைக்காக ஒரு நிதி திரட்டலை செய்தோம். பிரான்ஸ் ஆதரவாளர் றயா, நோர்வே ஆதரவாளர் சீலன், கனடா ஆதரவாளர் சீலன் இவர்கள் நேரடியாக நிதி திரட்டி தந்தனர். நிதி உதவி வழங்கிய ஒவ்வொருவருக்கும் அவர்கள் வழங்கிய நிதி அளவு என்ன என்பதையும், பெற்றுக் கொண்டதையும் தெரியப்படுத்தி கண்பார்வை பெற்ற தோழரே நேரடியாக உறுதிப்படுத்தினார். இந்த அணுகுமுறையை எல்லோரும் வரவேற்றனர். சமூக உணர்வு கொண்ட நிதி சேகரிப்பில் வெளிப்படும் தவறுகளை – சுருட்டல்களை களைவதற்காக ஒரு புதிய மார்க்கத்தை வெளிப்படுத்தி காட்டினோம். இதன் மூலம் நிதியை திரட்டி தந்த தோழர்களின் பொறுப்பை நேர்மையை, ஒழுங்குமுறையை எல்லோருக்கும் தெரியப்படுத்தினோம்).*

**தமிழரசன்**

*அவசர கால நிதிக்குழு சார்பாக.*

**தமிழீழ புதிய சனநாயகக் கட்சி (NDPT)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்